

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி சாதனைகள், கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிரச்சாரம் காரணமாக தேனி நாடாளுமன்ற இந்தியா கூட்டணி தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., தனது வெற்றிக்கு முழு பங்காற்றிய மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தியை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து, நினைவு பரிசு வழங்கினார். உடன் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், ஒன்றியச் செயலாளர் அஜித் பாண்டி, தி.மு.க. நிர்வாகிகள் முல்லை சேகர், பங்களா மூர்த்தி உள்ளிட்டோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

### விடுதலை —

# தியாகத்தின் அடையாளம் மருது சகோதரர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக். 25-

**விடுதலை வீரர்கள் மருது பாண்டியர்களின் நினைவு நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "சிவகங்கைச் சீமையின் தீரர்களான மருதிருவரைப் போற்றுகிறேன் என்றும், விடுதலை மற்றும் தியாகத்தின் அடையாளங்களாக வாழ்ந்த மருது சகோதரர்களின் போராட்டமும், வீரமும் மக்கள் மனங்களில் என்றும் வாழும்" எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.**

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்த விடுதலை வீரர்கள் மருது பாண்டியர்களின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அந்நியரின் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற சிவகங்கைச் சீமையின் தீரர்களான மருதிருவரைப் போற்றுகிறேன்!

விடுதலை மற்றும் தியாகத்தின் அடையாளங்களாக வாழ்ந்து, இந்த மண்ணுக்கு உரமாகியுள்ள மருது சகோதரர்களின் போராட்டமும் வீரமும் மக்கள் மனங்களில் என்றும் வாழும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### திருப்பத்தூர் தொகுதிப் பொறுப்பாளர்கள் என்.சுந்தரராஜ் -கே.முருகவேல் பங்கேற்பு!

# காரைக்குடியில் 2026 தேர்தல் பணிகள் குறித்த செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் சிறப்புரை!

*சிவகங்கை, அக். 25 -*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் செந்தாமணி திருமண மண்டபத்திலும் காரைக்குடி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் சேர்ந்த கூட்டம் அபூர்வா திருமண மண்டபத்திலும் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

நகரச் செயலாளர் என்.குணசேகரன் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள். கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் என்.சுந்தர்ராஜ் முன்னாள் எம்.எல்.ஏ மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கே. முருகவேல் ஆகியோர் நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்தினர் பாகமுகவர்கள் ஆற்றவேண்டிய தேர்தல் பணிகுறித்து விளக்கிப் பேசினார்கள். இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சரும் மாவட்ட செயலாளருமான கே.ஆர். பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார் .

இந்தக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன் , திருமதி ஜோன்ஸ் ரூசோ ஆகியோர் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.துரைராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேல், விராமதிமாணிக்கம் , பூமிநாதன், கே.பாலசுப்பிரமணியன், குன்னக்குடி சுப்ரமணியன், பி.செல்வராஜ், கே. ஆர் .ஆனந்த், நாகனி ரவி, பூபால சிங்கம், சுப. சின்னத்துரை, லெ.மு. ரவிச்சந்திரன் மேயர் எஸ். முத்துதுரை, பேரூர் கழக செயலாளர்கள் கதிர்வேல், அசோக் ,கே.பி.எஸ்.பழனியப்பன், ராசு, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் கோகிலராணி நாராயணன் அம்பலமுத்து மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் எஸ்.ஏஸ்.ஏ.வல்லபாய், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசி வர்ணம் துணை அமைப்பாளர் மெ. காளிமுத்து பொதுக் குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, பி.ஆர். பெருமாள்,எம். சோமசுந்தரம், ஒன்றிய பொருளாளர் ஏ.எம். கண்ணன் நிர்வாகி கள் ராம. ரவி. சிவபுரி சேகர், முத்து குமார் அயலக அணி சன் சீமான் சுப்பையா, சொ.கண்ணன், சேவியர், புதூர் கண்ணன், மனோகரன், சன்சுப்பையா, துரை.நாகராஜ் ,தனம் சிங் கமுத்து அழகையா, உட்பட பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

### மாமன்னர்கள் மருது சகோதரர்கள் 223வது பிறந்தநாள் விழா!

# மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

*மதுரை, அக். 25 -*



மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"மாமன்னர்கள் மருது சகோதரர்கள் 223வது பிறந்தநாள் விழாவை" முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் 27.10.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் தெப்பக்குளத்தில் அமைந்துள்ள "மாமன்னர்கள் மருது சகோதரர்களின் திருவுருவச்சிலைக்கு" மாலை அணிவித்து மரியாதை செய்யப் படவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இராணி ஸ்ரீகுமார் எம்.பி. - ஈ.ராஜா எம்.எல்.ஏ. - வே.ஜெயபாலன் முன்னிலையில்

# தென்காசி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## 2438 பயனாளிகளுக்கு – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் நல உதவிகள் வழங்கினார்!

*தென்காசி, அக். 25 -*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிபணிகள்,பல்வேறு திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று 2,438 பயனாளிகளுக்கு ரூபாய் 19,11,19,358 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (23.10.2024) மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா,தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், ஆகியோர் முன்னிலையில் பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் அனைத்து துறை அலுவலர்களுடான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று தெரிவித்ததாவது.*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி,மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றங் கள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்களுக்கும் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்து தரப்பு மக்களுக்கும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களை கொண்டு சேர்க்க வேண்டும் என உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது.*

*இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ் ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் வருவாய்த் துறையின் மூலம் 67 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா,107 பயனாளி களுக்கு வரன்முறைபட்டா,69 பயனாளிகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு வழங்கப்படும் பட்டா,38 பயனாளிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு வழங்கப்படும் பட்டா,147 பயனாளிகளுக்கு நகர நிலவரித்திட்ட பட்டா,145 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் (உட்பிரிவுடையது),588 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் (உட்பிரிவற்றது)என மொத்தம் 1161 பயனாளிகளுக்கு ரூ.1,35,33,700 மதிப்பிலான பட்டாக்களையும், மாவட்ட தொழில் மையம் மூலம் 07 பயனாளி களுக்கு வேலை இல்லாத இளைஞர் களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் மூலம் ரூ.37,56,815, மதிப்பிலான கடனுதவிகளையும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் 20 பயனாளிகளுக்கு ரூ.1கோடி மதிப்பிலான முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகளை யும்,கூட்டுறவுத் துறையின் மூலம் 02 பயனாளிகளுக்கு தொடக்கக் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல் சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் டிராக்டரினையும்,01பயனாளிக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல் சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் ஹார்வெஸ்ட்டரினையும், 01பயனாளிக்கு செங்கோட்டை வட்டார சுய உதவி குழு கூட்டுறவு சங்கம் பதிவு சான்றிதழையும்,ஒரு பயனாளிக்கு மகளிர் சுய உதவி குழு கடனுதவியும், ஒரு பயனாளிக்கு பயிர் கடனுதவி யினையும்,01பயனாளிக்கு கால் நடை பராமரிப்பு கடனுதவியும்,02 பயனாளிக்கு கிசான் கார்டுகளையும் என மொத்தம் 09 பயனாளிகளுக்கு ரூ.55.93,718/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,தொழிலாளர் நலத்துறையின் மூலம் 01 பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித் தொகையும்,02 பயனாளிகளுக்கு ஓய்வூதியத் தொகையினையும், 02 பயனாளிகளுக்கு நலவாரிய புதிய பதிவு அட்டைகளையும் என மொத்தம் 05 பயனாளிகளுக்கு ரூ.35,000 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தோட்டக்கலைத்துறையின் மூலம் தேசிய தோட்டக் கலை இயக்கம் 2024-2025 இன் கீழ் 03 பயனாளிகளுக்கு வெங்காயபரப்பு விரிவாக்கம் விதைகளையும், 01பயனாளிக்கு குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு ஆணையினையும்,01 பயனாளிக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் நறுமண பயிர்கள் பரப்பு விரிவாக்கம் விதைகளையும்,என மொத்தம் 05 பயனாளிகளுக்கு ரூ.1,59,500 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,சமூக நலத் துறை மூலம் 03 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.1,50,000 வைப்புத் தொகை பத்திரத்தினையும்,வேளாண் பொறியியல் துறை மூலம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண்வளர்ச்சி திட்டம் இலவச போர்வெல் மற்றும் இலவச மின்சாரம் அமைத்தல் 2024-2025 (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) க்கான பணி ஆணையினை 04 பயனாளிகளுக்கும் என மொத்தம் ரூ.32,00,000 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் இயற்கை மரணம் அடைந்த மாற்றுத்திறனாளிகளின் வாரிசுதாரர்கள் 09 நபர்களுக்கு ரூ.1,53,000 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,வேளாண்மைத் துறையின் மூலம் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் 2024-2025 திட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு ஆத்தூர் கிச்சடி சம்பா நெல் விதைகளையும்,01 பயனாளிக்கு தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்தை பாதுகாப்பு இயக்கம் 2024-2025 இன் கீழ் திரவ உயிர் உரத்தினையும்,01 பயனாளிக்கு மாநில வேளாண்வளர்ச்சி திட்டம் 2024-2025 கீழ் உளுந்து விதைகளையும் என மொத்தம் 04 பயனாளிகளுக்கு ரூ1725,மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,ஊரக வளர்ச்சி துறை மூலம் 11பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் அனுமதி ஆணையினையும் என மொத்தம் ரூ.38,92,900 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,தாட்கோ மூலம் 01 பயனாளிக்கு டிராக்டர் மானியம் மற்றும் 01பயனாளிகளுக்கு தூய்மைப் பணியாளர் அட்டை என மொத்தம் 02 பயனாளிகளுக்கு ரூ.2,25,000 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 23 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களையும்,வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 05 குடும்பத்தினருக்கு பணி நியமன ஆணைகளையும்,22 பயனாளிகளுக்கு புதிரை வண்ணார் நலவாரிய அடையாள அட்டைகளையும் என மொத்தம் 50 பயனாளிகளுக்கு ரூ.13,69,000 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம் 1148 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், மகளிர் திட்டத்தின் மூலம் 06 பயனாளிகளுக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான வங்கி பெருங்கடன்களையும்,113 பயனாளி களுக்கு சுய உதவி குழுக்களுக்கான கடன் உதவிகளையும் என மொத்தம் 119 பயனாளிகளுக்கு ரூ.14,90,49,000 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 2,438 பயனாளிகளுக்கு ரூ.19,11,19,358 ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்.*

*நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன்,மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அமிர்தலிங்கம் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*



நெல்லை மாவட்டம் வள்ளியூர் வடலிவிளை பகுதியில் சட்டப்பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024–2025) தலைவர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,முதன்மை செயலாளர் சீனிவாசன்,குழு உறுப்பினர்கள் அசோகன் (சிவகாசி)ஈஸ்வரன் (திருச்செங்கோடு)கிரி(செங்கம்) துரை சந்திரசேகரன் (திருவையாறு)சிந்தனை செல்வன்(காட்டுமன்னார்கோவில்)பிரகாஷ் (ஓசூர்)வேலு (மயிலாப்பூர்)ஜவாஹிருல்லா (பாபநாசம்)நெல்லை சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் குறைவான காற்றிலிருந்து அதிக மின் உற்பத்தி பெறும் புதிய காற்றாலை அமைக்கப் பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மகாராஜா நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் ராஜன் (நாங்குநேரி)ஜோசப்ராஜ் (அம்பாசமுத்திரம்)சிவராஜ் (இராதாபுரம்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.